## அரசியல் – நிதி – மொழி என, அனைத்து உரிமைகளையும் பறிக்கத் துடிக்கும்

# ஒன்றிய பா.ஜ.க.வுக்கும் - பாதம் தாங்கும் முரட்டு அடிமைகளுக்கும் வருகின்ற சட்டமன்றத் தேர்தலில் பாடம் புகட்டுவோம்!

### மண்ணச்சநல்லூரில் நடைபெற்ற தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில்

## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் உரை!

திருச்சி,ஏப்.12–

**திருச்சி மாவட்டம், மண்ணச்சநல்லூரில், கழக இளைஞர் அணிச் செயலாளரும் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள், மண்ணச்சநல்லூர் சட்டமன்றத் தொகுதியின் வேட்பாளர் சீ.கதிரவனுக்கு உதயசூரியன் சின்னத்தில் வாக்கு சேகரித்துப் பிரச்சாரம் மேற்கொண்டார்.**

**அப்போது அவர், “அரசியல் உரிமை, நிதி உரிமை, மொழி உரிமை என அனைத்து உரிமைகளையும் பறிக்கத் துடிக்கும் ஒன்றிய பா.ஜ.க.வையும்– அவர்களுக்கு பாதம் தாங்கும் முரட்டு அடிமைகளையும் வருகின்ற சட்டமன்றத் தேர்தலில், வீழ்த்துவோம்” என்று குறிப்பிட்டார்.**

**கழக இளைஞர் அணிச் செயலாளரும் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் ஆற்றிய உரை வருமாறு:**

முதலில் இவ்வளவு சிறப்பான, அன்பான, எழுச்சியான வரவேற்பை அளித்திருக்கக்கூடிய உங்கள் அனைவருக்கும் முதலில் என் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

### மக்கள் சேவையில் ஆர்வம்

நான் கிட்டத்தட்ட 12 நாட்களாக, தமிழ்நாடு முழுவதும் சென்று பிரச்சாரம் செய்துகொண்டு இருக்கிறேன். ஒவ்வொரு தொகுதியாகச் சென்று ஒவ்வொரு வேட்பாளருக்கும், நம் கூட்டணிக் கட்சி வேட்பாளர்களுக்கும் நம் வெற்றிச் சின்னமான உதயசூரியன் சின்னத்தில் வாக்குக் கேட்டுக்கொண்டு இருக்கிறேன்.

இன்று, தலைவர், `என்னை மண்ணச்சநல்லூர் சென்று உதயசூரியன் சின்னத்தில் கதிரவனுக்கு வாக்குக் கேட்டுவிட்டு வா’ என்று அனுப்பி இருக்கிறார்கள். நான் அப்படித்தான் நினைத்துக்கொண்டு வந்தேன். சரி, கதிரவனுக்கு உதயசூரியன் சின்னத்தில் வாக்களியுங்கள் என்று கேட்கலாம் என்று வந்தேன். ஆனால், இங்கே வந்து பார்த்த பிறகுதான் தெரிகிறது, நீங்கள் எல்லாம் ஏற்கனவே ஒரு முடிவெடுத்துவிட்டீர்கள் என்று.

உதயசூரியன் சின்னத்தில் கடந்த முறையே நீங்கள் கிட்டத்தட்ட 60,000 வாக்குகள் வித்தியாசத்தில் கதிரவனை வெற்றி பெறச் செய்தீர்கள். நான் உங்களிடம் கேட்டுக்கொள்வதெல்லாம் இந்த முறை ஒரு லட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெறச் செய்ய வேண்டும். நிச்சயம் செய்வீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

கதிரவனைப் பற்றி உங்களிடம் நான் அதிகமாகப் பேச விரும்பவில்லை. அவரை அறிமுகப்படுத்த வேண்டிய அவசியம் இல்லை. உங்கள் அனைவருக்கும் இந்தத் தொகுதி முழுவதும் அறிமுகமானவர்தான் கதிரவன் அவர்கள். இரண்டாவது முறையாகப் போட்டியிடுகிறார். மக்களுக்குச் சேவை செய்ய வேண்டும் என்ற ஒரு உன்னத நோக்கத்தில் ஆர்வமிக்க ஒரு இளைஞர். தேர்தல் நேரத்தில் மட்டும் அல்ல, எந்த நேரத்திலும் உங்களால் எளிதாக அவரைச் சென்று அணுக முடியும், பார்க்க முடியும், உங்கள் கோரிக்கைகளைக் கூற முடியும்.

### வேலைவாய்ப்பு முகாம்கள்

எந்த நேரத்திலும் மக்கள் பணிக்குத் தயாராக இருக்கக்கூடியவர்தான் சகோதரர் கதிரவன் அவர்கள். குறிப்பாக இந்தத் தொகுதியில் இருக்கக்கூடிய இளைஞர்களுக்கு, மாணவர்களுக்கு ஒரு சிறப்பான எதிர்காலத்தை உருவாக்கித் தர வேண்டும் என்று ஒரு லட்சியத்துடன் உழைத்துக் கொண்டு இருக்கிறார். இந்தத் தொகுதி இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு முகாம்கள், அனைத்து வேலைவாய்ப்புத் திட்டங்களையும், வேலைவாய்ப்பு முகாம்களைத் தொடர்ந்து நடத்தி ஆயிரக்கணக்கான இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை, சகோதரர் கதிரவன் அவர்கள் உறுதி செய்திருக்கிறார்.

நீங்கள் கோரிக்கை வைத்தீர்கள் என்றால், அதை நிறைவேற்றுவதற்கு எல்லா முயற்சிகளிலும் இறங்குவார். எப்போதுமே உங்களின் குரலாக இருக்கக்கூடியவர், எல்லாவற்றையும்விட மிக மிக முக்கியம் மிகவும் வசதியான வேட்பாளர். அது உங்கள் அனைவருக்கும் தெரியும். அதை நான் சொல்ல வேண்டியதில்லை. அதனால் அதிக வாக்கு வித்தியாசத்தில் அவரை வெற்றி பெறச் செய்து சட்டமன்றத்துக்கு அனுப்புங்கள். நான் இன்று அவரை அழைத்து வந்திருக்கிறேன். எந்த உரிமையில் உங்களைப் பார்க்க வந்தேன்? எந்த உரிமையில் மீண்டும் உதயசூரியன் சின்னத்துக்கு, மீண்டும் கதிரவனுக்கு வாக்களியுங்கள் என்று எந்த உரிமையில் கேட்க வந்தேன்? கடந்த ஐந்து ஆண்டுகள் அவர்





செய்திருக்கக்கூடிய பணிகள், அவர் இந்தத் தொகுதிக்குக் கொண்டு வந்திருக்கக்கூடிய திட்டங்கள். ஒரு சில திட்டங்களை மட்டும் நான் இங்கே ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

### மண்ணச்சநல்லூர்க்கான திட்டங்கள்

அரசு உயர்நிலைப் பள்ளி மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் கிட்டத்தட்ட 55 கோடி ரூபாய் செலவில் 140 புதிய வகுப்பறைகளைக் கட்டிக் கொடுத்திருக்கிறார்.

ஊராட்சிகளில் சுமார் 120 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தார்ச்சாலை மற்றும் பாலங்களை, கதிரவன் அவர்கள் உங்களுக்காகச் செய்து கொடுத்திருக்கிறார்.

311 கோடி ரூபாய் ஒதுக்கீட்டில் அனைத்து ஊராட்சிகளிலும் குடிநீர் வசதிகள், வடிகால் வசதிகள் உள்ளிட்ட பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

535 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மரம் நடுதல், மரத்தோட்டம் அமைத்தல், நாற்றுப்பண்ணை அமைத்தல் போன்ற பணிகள், 6 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து கிளியநல்லூர், திருவாசி, சமயபுரம், மண்ணச்சநல்லூர் பகுதிகளில் அனைத்து வாய்க்கால்களும் தூர்வாரப்பட்டு இருக்கின்றன.

பெருவளை வாய்க்கால், பங்குனி வாய்க்கால், வடக்கு தெற்கு அய்யன் வாய்க்கால், காவேரி ஆறு ஆகியவற்றில் 22 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அணைக் கட்டுகள் கட்டப்பட்டிருக்கின்றன.

அனைத்து ஊராட்சிகளிலும் மாற்றுத் திறனாளிகளுக்கு மட்டும் 19 கோடி ரூபாய் அளவுக்கு, நலத்திட்ட உதவிகளை உங்களின் வேட்பாளர் கதிரவன் அவர்கள் செய்திருக்கிறார்.

அரசு உதவி பெறுகின்ற அனைத்து மாணவ மாணவிகளுக்கும் 5 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மிதிவண்டிகளை வழங்கியிருக்கிறார்.

மண்ணச்சநல்லூர் தொகுதிக்குட்பட்ட சுமார் 3,000 குடும்பங்களுக்கு நம் திராவிட மாடல் அரசு பட்டாக்களை வழங்கியுள்ளது. இவற்றையெல்லாம் செய்து கொடுத்துவிட்டு, அந்த உரிமையோடு தான் மீண்டும் அவருக்கு ஒரு வாய்ப்புத் தாருங்கள் என்று உங்களிடம் கேட்க வந்திருக்கிறேன்.

நம் தலைவர் கடந்த சட்டமன்றத் தேர்தலில் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றி இருக்கிறோம். கலைஞர் மகளிர் உரிமைத் தொகை கொடுத்தோம். மகளிருக்கு விடியல் பயணத் திட்டம், கட்டணமில்லாப் பேருந்து திட்டம் கொடுத்தோம்.

### இலவச மடிக்கணினிகள்

மூன்று மாதங்களுக்கு முன்னால் 10 லட்சம் மாணவ மாணவிகளுக்கு இலவச மடிக்கணினியையும் நம் முதலமைச்சர் கொடுத்திருக்கிறார்.

கல்வி ஊக்கத்தொகை, அரசுப் பள்ளியில் படித்து எந்தக் கல்லூரியில் சென்று சேர்ந்தாலும் ஆயிரம் ரூபாய் மாதம் தோறும் கல்வி ஊக்கத்தொகை நம் அரசு கொடுத்திருக்கிறது. இப்படிப் பல்வேறு திட்டங்களைச் செய்து கொடுத்திருக்கிறோம்.

இந்த தேர்தலுக்கு பல்வேறு வாக்குறுதிகளைக் கொடுத்திருக்கிறோம். மகளிர் உரிமைத் தொகைத் திட்டம் மீண்டும் திராவிட மாடல் 2.0 ஆட்சி அமைந்த உடனே மாதம் 1,000 ரூபாய் இல்லை, அதை உயர்த்தி 2,000 ரூபாய் வழங்குவதாகத் தலைவர் வாக்குறுதி கொடுத்திருக்கிறார்.

முதியோர் உதவித் தொகை இப்போது 1,200 ரூபாய் கொடுத்துக்கொண்டு இருக்கிறோம், அதை உயர்த்தி 2,000 ரூபாய் வழங்குவேன் என்று தலைவர் வாக்குறுதி கொடுத்திருக்கிறார்.

கல்வி ஊக்கத்தொகை 1,000 ரூபாயை உயர்த்தி 1,500 ரூபாய் கொடுப்போம் என்று சொல்லியிருக்கிறார்.

### 10 லட்சம் வீடுகள்

கலைஞர் கனவு இல்லத் திட்டத்தில் அடுத்த ஐந்து ஆண்டுகளில் 10 லட்சம் வீடுகள் கட்டப்பட்டு யார் யாருக்கெல்லாம் வீடு இல்லையோ அவர்களுக்கெல்லாம் வீடு ஒதுக்கப்படும் என்று வாக்குறுதி கொடுத்திருக்கிறோம். அடுத்த ஐந்து ஆண்டுகளில் கல்லூரிகளில் பயிலும் 35 லட்சம் மாணவ மாணவிகளுக்கு மடிக்கணினி கொடுக்கப்படும் என்று வாக்குறுதி கொடுத்திருக்கிறோம்.

இன்னொரு முக்கியமான திட்டம் உங்களுக்குத் தெரியும், ஆட்சி அமைந்த உடனே நம் முதலமைச்சர், நம் அரசு அனைத்து மகளிரிடமும் 8,000 ரூபாய் கொடுத்துவிடுவார். அதை வைத்து உங்கள் வீடுகளுக்கு என்ன மின் சாதன பொருட்கள் தேவையோ அவற்றை நீங்களே முடிவு செய்து வாங்கிக்கொள்ளலாம் என்று முதலமைச்சர் வாக்குறுதி கொடுத்திருக்கிறார். நம் முதலமைச்சர் அவர்கள் நிச்சயம் சொன்னால் அதைச் செய்து காட்டுவார், அதைச் செய்ய வேண்டும் என்றால், வரும் திராவிட மாடல் 2.0 ஆட்சியில் இந்த மண்ணச்சநல்லூர் தொகுதியில் ஒரு லட்சம் வாக்கு வித்தியாசத்தில் கதிரவனை வெற்றிபெறச் செய்ய வேண்டும்.

### நிதி கொடுத்திருக்கிறார்களா?

ஒன்றை மட்டும் யோசித்துப் பாருங்கள், நாம் இவ்வளவு திட்டங்களைச் செய்திருக்கிறோம். ஐந்து ஆண்டுகளில் இவ்வளவு திட்டங்களைச் செய்திருக்கிறோம். மீண்டும் ஐந்து ஆண்டுகள் ஆட்சிக்கு வந்தால், என்ன செய்வோம் என்று வாக்குறுதி கொடுத்திருக்கிறோம். ஒன்றிய பா.ஜ.க. அரசு கடந்த ஐந்து ஆண்டுகளில் தமிழ்நாட்டைத் திரும்பிப் பார்த்திருக்கிறார்களா? இப்போது தேர்தல் என்ற உடனே மோடியும் அமித்ஷாவும் மாறி மாறி தமிழ்நாட்டுக்கு வருகிறார்களே, தமிழ்நாட்டிற்கு நிதி கொடுத்திருக்கிறார்களா? தமிழ்நாட்டுக்கு ஏதாவது திட்டங்கள் கொடுத்திருக்கிறார்களா?

கடந்த ஒன்றிய அரசின் பட்ஜெட்டில் தமிழ்நாட்டுக்கு என்று ஒரு திட்டம்கூடக் கிடையாது. தமிழ்நாடு என்கிற பெயரே அதில் இல்லை. இப்படி தமிழ்நாட்டை வஞ்சிக்கின்ற ஒன்றிய பா.ஜ.க. அரசை, தமிழ்நாட்டிலிருந்து நாம் ஓரங்கட்ட வேண்டும். பா.ஜ.க. நேரடியாக வந்தால் நுழைய விடமாட்டோம் என்று தெரிந்து இன்று அ.தி.மு.க. என்கிற போர்வையைப் போர்த்திக்கொண்டு உள்ளே வரப் பார்க்கிறார்கள். அதனால் தான் நம் தலைவர் மீண்டும் மீண்டும் சொல்கிறார், இந்தச் சட்டமன்றத் தேர்தல் தமிழ்நாடு அணி *vs* டெல்லி அணி என்று. தமிழ்நாட்டு அணி நாம் வெற்றிபெற்று காட்ட வேண்டும. டெல்லி அணிக்கு மோடிதான் கேப்டன். அவரின் அடிமை எடப்பாடி பழனிசாமி.

முரட்டுப் பக்தர்கள் பார்த்திருப்பீர்கள், முரட்டுத் தொண்டர்களைப் பார்த்திருப்பீர்கள். எங்காவது முரட்டு அடிமையைப் பார்த்திருக்கிறீர்களா? இதைத்தான் சொன்னேன், அவர் கோபித்துக்கொண்டார். என்ன தெரியுமா சொன்னார்? ``உதயநிதிக்கு எந்த அனுபவமுமே கிடையாது, உதயநிதிக்கு என்ன அனுபவம் இருக்கிறது?” என்று சொல்லிவிட்டார். ஆம், அவர் என்னைவிட வயதில் மூத்தவர்தான். அவர் ரொம்ப அனுபவசாலிதான்.

### எனக்குக் கிடையாது

2016–ஆம் ஆண்டு மக்கள் வாக்களித்தது, மக்கள் முதலமைச்சராகத் தேர்ந்தெடுத்தது மறைந்த முதலமைச்சர் ஜெயலலிதா அம்மையாரை. அவர்கள் மறைந்த பிறகு சசிகலா அம்மா கால்களைப் பிடித்துத்தான் அவர் முதலமைச்சர் ஆனார். இந்த அனுபவம் எனக்குக் கிடையாது.

இதைத்தான் நான் சொன்னேன். என்ன தெரியுமா சொல்லிவிட்டார் இப்போது? ``இதில் என்ன தவறு இருக்கிறது? வயதில் பெரியவர்கள், எனக்குப் பொறுப்பு கொடுத்தார்கள், பதவி கொடுத்தார்கள், அதனால் காலில் விழுந்தேன்” என்றார். நான் மீண்டும் சொல்கிறேன், நீங்கள் அவர்கள் கால்களைப் பிடித்தது தவறு கிடையாது. ஆனால் பிடித்த காலை வாரி விட்டீர்கள் பார்த்தீர்களா? அதுதான் தவறு.

முதலில் ஜெயலலிதா அம்மா கால், அடுத்து சசிகலா அம்மா கால், சசிகலா அம்மா சிறைக்குச் சென்ற உடனே டி.டி.வி தினகரன் கால், கொஞ்ச நாள் கழித்து அண்ணன் ஓ.பி.எஸ் கால். இப்போது ஓ.பி.எஸ் நம் அணிக்கு வந்துவிட்டார். இப்போது யார் காலும் எனக்கு வேண்டாம், நான் மோடி காலை மட்டும்தான் பிடித்துக்கொண்டு தொங்குவேன் என்று தொங்கிக்கொண்டு இருக்கிறார் எடப்பாடி பழனிசாமி அவர்கள்.

### முக்கியமான தேர்தல்

அவருக்கு இந்தத் தேர்தலில் சரியான பாடத்தைப் புகட்டவேண்டும். ஏற்கனவே 10 தோல்விகளைக் கொடுத்திருக்கிறோம். இந்தத் தேர்தலோடு மொத்தத் தோல்வியையும் கொடுத்துப் பழனிசாமியை வீட்டுக்கு அனுப்ப வேண்டும். நீங்கள் இப்போது தொலைக்காட்சியெல்லாம் பார்ப்பீர்கள், செய்தித்தாள்களையெல்லாம் பார்த்துக் கொண்டு இருப்பீர்கள். அவர் இரண்டு விரல்களைக் காட்டி வாக்குச் சேகரிக்கிறார் என்று நினைத்துக்கொண்டு இருக்கிறீர்களா? அவர் இரண்டு விரல்களைக் காட்டுவது சின்னத்தைக் கிடையாது. ``நான் ஏற்கனவே 10 முறை தோற்றுவிட்டேன், இப்போது நான் 11–வது முறை தோற்கப்போகிறேன்” என்பதை அடையாளமாகச் சொல்லிக்கொண்டு இருக்கிறார்.

எனவே இந்தத் தேர்தல் முக்கியமான தேர்தல், டெல்லி *vs* தமிழ்நாடு தேர்தல். இதில் தமிழ்நாடு நாம் வெற்றிபெற்று காட்ட வேண்டும். தமிழ்நாடு என்றைக்கும் டெல்லிக்கு அவுட் ஆப் கண்ட்ரோல் தான் என்பதை இந்தத் தேர்தலில் நிரூபித்துக் காட்டுவோம்.

உங்களையெல்லாம் அன்போடு கேட்கிறேன், பண்போடு கேட்கிறேன், பாசத்தோடு கேட்கிறேன், உரிமையோடு கேட்கிறேன், உங்கள் வீட்டுப் பிள்ளையாக இருந்து கேட்கிறேன். இன்னும் பெருமையாகச் சொல்ல வேண்டும் என்றால் தலைவரின் மகனாக இருந்து கேட்கிறேன், முத்தமிழறிஞர் கலைஞரின் பேரனாக இருந்து கேட்கிறேன். உதயசூரியன் சின்னத்தில் வாக்களித்து கதிரவன் அவர்களுக்குக் குறைந்தது ஒரு லட்சம் வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெறச் செய்து சட்டமன்றத்துக்கு அனுப்புங்கள். உங்கள் தொகுதிக்கு என்னென்ன தேவையோ அவற்றை நம் முதலமைச்சர் அவர்கள் செய்து கொடுப்பார்.

உங்களின் அன்புக்கும் ஆதரவுக்கும் நன்றி, நன்றி, நன்றி.

இவ்வாறு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் உரையாற்றினார்.

### பங்கேற்றவர்கள்

அமைச்சர் கே.என்.நேரு, வேட்பாளர் கதிரவன், வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் தியாகராஜன், நாடாளுமன்ற உறுப்பினர் அருண் நேரு, மாவட்ட அவைத் தலைவர் அம்பிகாபதி, மாவட்டத் துணைச் செயலாளர் பானுமதி கண்ணன், பொதுக்குழு உறுப்பினர் ஸ்ரீதர், என்.எஸ். கருணைராஜா, ராமராஜன், ஒன்றிய பேரூர் கழகச் செயலாளர்கள் ராமச்சந்திரன், கணேசன், செந்தில்குமார், சீனிவாசப்பெருமாள், கே.பி.ஏ.செந்தில், துரை ராஜசேகரன், மனோகரன், பேரூராட்சி மன்றத் தலைவர்கள் சிவசண்முககுமார், சரவணன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கார்த்திக், துணை அமைப்பாளர்கள் கலையரசன், மருதுசேகர், இளைஞர் அணி உள்ளிட்ட அனைத்து அணிகளைச் சார்ந்த நிர்வாகிகள், கூட்டணிக் கட்சியைச் சேர்ந்த இந்திய தேசிய காங்கிரஸ், திராவிடர் கழகம், தேசிய முற்போக்கு திராவிடக் கழகம், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, விடுதலைச் சிறுத்தைகள் கட்சி, மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம், இந்திய யூனியன் முஸ்லிம் லீக், மனிதநேய மக்கள் கட்சி, மனிதநேய ஜனநாயகக் கட்சி, தமிழர் தேசம் கட்சி, எஸ்.டி.பி.ஐ, முக்குலத்தோர் புலிப்படை உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.